பங்கேற்போம் ! உரிமையை நிலைநாட்டுவோம் !

ARUNODHAYA Children Sangam

அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு

# சிட்டெறும்பு பேசுது

*தனிச் சுற்றுக்கு மட்டும்

உயிர் : 03
குரல் : 04

அக்டோபர் 2025 – டிசம்பர் 2025



# எனது கனவு பள்ளி

## மாநாடு சிறப்பு மலர்

அருணோதயா
குழந்தை தொழிலாளர் மையம்

# சிட்டெறும்பு பேசுது

உயிர் : 03 | குரல் : 04

அக்டோபர் – டிசம்பர் 2025

**ஆசிரியர்கள்**

L. யுவராணி, V.சுஜிதா, S.ஜிஷ்ணு, K.நிஷாந்த்

**இணை ஆசிரியர்கள்**

G. லட்சுமிபிரியா, D. சந்தோஷ், M. சாதனா A.சஞ்சய். G.அபிநயா. J.ஐஸ்வரியா

**உதவி ஆசிரியர்கள்**

G. லட்சுமிபிரியா, M. சுஹாசினி. P. தமிழ், S. லோகேஷ், V. சுஜிதா, S. தங்கவித்யா, S.சக்தி முருகன், R. கன்னியம்மா, M. யுவராஜ்,

**நிருபர்கள்**

S. நிவிஸ், A. ஹேமன், V. நாகராணி, S. ஓவியா, D. ரொபினா, M. ஜெனிலியா S. தங்கவித்யா, S.சக்தி முருகன், R. கன்னியம்மா, M. யுவராஜ்,

**ஓவியர்கள்**

S.விஷால், H. மோகித், D.கவியரசன்,S.தர்ஷன், H. சக்திராஜன், P. தனுஷ். D.அஷ்வின் A.முஹம்மது சுல்தான், P.S. பத்மேஷ்

**நிர்வாகம்**

முனைவர்.வர்ஜில் டி சாமி
நிர்வாக இயக்குநர்

**ஒருங்கிணைப்பு**

திருமதி. செ. செல்வி
குழந்தை பங்கேற்பு கருத்தியல் வழிநடத்துனர்

**வடிவமைப்பு**

S. விஷால், K. நிஷாந்த், L. யுவராணி, S.ஜிஷ்ணு,

வடிவமைப்பில் உதவி. திரு.G. டான்போஸ்கோ,

**தொடர்பு முகவரி**

அருணோதயா குழந்தை தொழிலாளர் மையம்
19/9/2, பஜார் தெரு. இராயபுரம்
சென்னை – 600013
**Phone** : 044-42632264
**Mobile** : 9444051529, 8925274527

**மின்னஞ்சல்**

arunodhayaorg@gmail.com

**இணையதளம்**

www.arunodhayacentre.in



## ஆசிரியர் உரை

தோழர், தோழியர் அனைவருக்கும் என் அன்பு வணக்கங்கள்!! அனைவரும் நலம் தானே!!

இதோ நம் கனவு பள்ளியை குறித்து நம் கனவுகள், கற்பனைகள், ஆசைகள், போன்றவற்றை கதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள், பாடல்கள் மூலமாக நாம் எழுதிய அனைத்தும் தொகுத்து இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். தொடர்ந்து சிட்டெறும்பை மெருகேற்றுவதற்கும், வெளியிடுவதற்கும் உங்கள் ஒத்துழைப்பை நல்கி வருவதற்கு என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**"கண்ணுடைய ரென்பவர் கற்றோர்-முகத்திரண்டு
புண்ணுடயவர் கல்லாதவர்."**

என்பது வள்ளுவரின் வாக்கு, மேலும் படிக்கும் வயதில் அம்மா, அப்பா மற்றும் குடும்பத்தினருடன் வாழ்வதை காட்டிலும் பள்ளி, நண்பர்கள், மற்றும் ஆசிரியர்களிடம் தான் அதிக நேரம் செலவழிக்கிறோம். தரமான மாணவர்களை உருவாக்கும் பள்ளி நிறுவனம் உலகதரம் வாய்ந்ததாகவும் அனைத்து குழந்தைகளுக்கும் சமமானதாகவும், குழந்தைகளுக்கு உகந்ததாகவும், ஏற்றதாகவும் இருப்பது மிகவும் அவசியம். ஐநாவின் குழந்தைகள் உரிமைகள் உடன்படிக்கை சாசனத்தில் உள்ள அத்தனை உரிமைகளும் உள்ளடக்கிய ஒரு நிறுவனமாக பள்ளி கூடங்கள் இருப்பது மிகவும் முக்கியம். இவ்வாறு குழந்தை நேயப் பள்ளிகளை அமைத்து தருவது அரசின் தலையாய கடமையாகும்.

மாணவர்களாகிய நாமும் நம் கனவு பள்ளி குறித்து பல்வேறு செயல்பாடுகளை செய்துள்ளோம்.

1. மாதிரி மாநாடு பகுதியளவில் நடத்தி நம் சமூகத்தில் உள்ள குழந்தைகளுக்கும் மக்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் நம் பரிந்துரைகளை தெரிவித்துள்ளோம்.
2. பள்ளி குழந்தைகளிடையே குழந்தை நேய பள்ளி குறித்து சிறிய ஆய்வு நடத்தி ஆய்வின் மூலம் குழந்தைகளின் கருத்துக்களை அரசிற்கு பகிர்ந்துள்ளோம்.
3. மேலும் எனது கனவு பள்ளி என்ற தலைப்பில் நம் அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு மாநாட்டையும் நடத்தி அதில் நம் கனவு பள்ளி குறித்து கண்காட்சியும் வைத்து நம் கனவுகளை அரசுக்கு தெரியப்படுத்தினோம்.

முகமது கஜினி 17 முறை போரில் தோற்று 18வது முறை இந்தியாவின் தலை நகரான தில்லியை கைப்பற்றினார் என்று வரலாற்றில் நாம் படித்துள்ளோம். முயன்றால் முடியாதது எதுவும் இல்லை என்பதையே நாம் இந்த வரலாற்று நிகழ்வின் மூலமாக கற்றுக் கொண்ட பாடம்.

வாருங்கள் நண்பர்களே!!

**நாமும் தொடர்ந்து முயலுவோம் நம் கனவு பள்ளி நனவாகும் வரை நம் கருத்துக்களை எடுத்துரைப்போம்"**

**S. ஜிஷ்ணு**
10 ஆம் வகுப்பு. எண்ணூர்



# அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பு செயல்பாடுகள்

(அக்டோபர் - டிசம்பர் 2025)

## குழந்தைகள் சங்க மூன்று மாத செயல்பாடு

| வ.எண் | மாதம் | பேசபட்ட தலைப்பு |
|---|---|---|
| 1 | அக்டோபர் | • ஒருங்கிணைப்பு கூட்டம்<br>• மாநாடு திட்டமிடல்<br>• கொடுத்து மகிழுங்கள் செயல்பாடு திட்டமிடல் |
| 2 | நவம்பர் | • பள்ளி மதிப்பீட்டு ஆய்வு குறித்து திட்டமிடல்<br>• குழந்தைகள் சங்க மாநாடு நடத்துதல்<br>• மாதிரி மாநாடு நடத்துதல்<br>• மாநாட்டிற்கு பொறுப்பேற்ற குழந்தைகள் திட்டமிட்டு தன் பொறுப்புகள் செய்தல் குறித்த தகவல்கள்,<br>• கண்காட்சி தயார் செய்தல் |
| 3 | டிசம்பர் | • ஒருங்கிணைப்புகூட்டம்<br>• மாநாடு மதிப்பீடு |

### அக்டோபர்

**அக்டோபர் –14** அன்று அல்ட்ரிமெட்ரிக் ஐடி அலுவலகத்திற்கு குழந்தைகள் சங்க குழந்தைகளை பார்வையிடவும், பயிற்சி அளிக்கவும், குழந்தைகளின் கருத்துக்களை கேட்கவும் அழைத்து செல்லப்பட்டது. அங்கு செயற்கை நுண்ணறிவு குறித்த பயிற்சி செயல்முறை வடிவில் கற்று கொடுக்கப்பட்டது. இதில் 30 குழந்தைகள் கலந்து கொண்டனர்.




### கொடுத்து மகிழுங்கள் செயல்பாடு

**அக்டோபர்- 4** எண்ணூர் பகுதியில் பகுதியை சுத்தம் செய்யும் துப்புரவு பணியாளர்கள் 20 நபர்களுக்கு மதிய உணவு அளித்தனர்.

**அக்டோபர் – 4** கொருக்குப்பேட்டை பகுதியில் 25 கணவரை இழந்த பெண்களுக்கு உணவு, துணி மணிகள் கொடுத்தனர்.

**அக்டோபர்-8** அன்று திருவொற்றியூர் பகுதியில் உள்ள குழந்தைகள் புத்தகப்பை வாங்க முடியாமல் இருந்த வறுமையில் வாடிய இரண்டு சிறுவர்களுக்கு புத்தகம் மற்றும் பை வாங்கி கொடுத்தனர்.



**அக்டோபர்- 8** இராயபுரம் பகுதியில் உள்ள 10 குடும்பங்களுக்கு சமையல் பொருட்கள் வாங்கி கொடுத்து சினிமா, கடற்கரை போன்ற இடங்களுக்கு அனைவரையும் அழைத்து சென்று மகிழ்ச்சியடைய செய்தனர். இந்த நிகழ்வை சுயஉதவிகுழு பெண்களுடன் இணைந்து நடத்தினார்கள்.

**அக்டோபர் – 12** அன்று மாநாடு திட்டமிடல் கூட்டம் திருவொற்றியூர் உள்ள களப்பணி அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 30 குழந்தைகள் கலந்து கொண்டனர். மாநாடு பொறுப்புகளை பிரித்து கொண்டனர்.

## நவம்பர்

**நவம்பர்-** முதல் வாரத்தில் கொருக்குபேட்டை, திருவொற்றியூர், இராயபுரம், எண்ணூர் ஆகிய பகுதிகளில் பள்ளிகளில் குழந்தைகள் உரிமை குறித்து குழந்தைகளின் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. அதற்க்கான கேள்விகளை தயார் செய்தோம். இந்த கருத்துக் கணிப்பு பள்ளியில் குழந்தைகளின் தேவைகளை அறிந்து பூர்த்தி செய்யவும், ஆதரவு திரட்டும் நோக்கத்தோடு குழந்தைகளால் நடத்தப்பட்டது.

### குழந்தைகள் கருத்துக் கணிப்பின் துவக்கம்

ஆய்வின் துவக்கமாக குழந்தைகள் ஆய்வுக்கான கேள்விகளை தயார் செய்தனர். பள்ளியில் குழந்தைகளின் அடிப்படை உரிமைகள் தொடர்புடைய கேள்வியாக அக்கேள்விகள் இருந்தது. பின்பு அக்கேள்விகளை எவ்வாறு குழந்தைகளிடத்தில் கேட்க வேண்டும். எத்தனை குழந்தைகள் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தனர். அக்குழந்தைகளுக்கு திரு.ஷாம் சுந்தர் ஜகன்நாதன் பயிற்சியாளரை கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த ஆய்வில் மாணவர்களிடம் எவ்வாறு விவரங்களை சேகரிக்க வேண்டும், கருத்துக் கணிப்பின் நோக்கம் என்ன என்பது குறித்து தெளிவாக குழந்தைகளிடம் கேட்க வேண்டும் மற்றும் குழந்தைகளிடத்தில் அனுமதி பெற்று அவர்கள் கையொப்பம் வாங்க வேண்டும் என்று முடிவு எடுத்தனர், அதன்படி ஆய்வு படிவம் தயாரிக்கப்பட்டது. இந்த ஆய்வை மேற்கொள்ள 20 குழந்தைகள் முன் வந்தனர்.

இந்த கருத்துக் கணிப்பு வடசென்னையிலுள்ள கொருக்குப்பேட்டை, தண்டையார்பேட்டை, இராயபுரம், எண்ணூர், திருவொற்றியூர் பகுதிகளில் உள்ள குழந்தைகள் சங்க உறுப்பினர்களிடம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த கருத்துக் கணிப்பில் குழந்தைகள் பயிலும் 36 பள்ளிகளைக் குறித்த முக்கிய தகவல்களை தெரிவித்தனர்.

கீழே கொடுக்கப்பட்ட பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடம் கருத்து கணிப்பு நடத்தபட்டது.

| | |
|---|---|
| தொடக்கப்பள்ளி | 16 |
| நடுநிலைப்பள்ளி | 09 |
| அரசுஉயர்நிலைப்பள்ளி | 07 |
| அரசுமேல்நிலைப்பள்ளி | 03 |
| அரசுஉதவிபெறும்பள்ளி | 01 |
| **மொத்த பள்ளிகள்** | **36** |

நமது அருணோதயா குழந்தைகள் சங்க கூட்டமைப்பின் ஆண்டு அறிக்கை குறும்படமாக படமெடுக்கபட்டது

மாநில குழந்தைகள் ஆணையம் தலைவர் திருமதி புதுக்கோட்டை விஜயா அவர்களை CACS உறுப்பினர் செல்வி. நவிந்தா அவர்கள் நேரில் சந்தித்து மாநாட்டிற்கு அழைப்பு விடுத்தார்.





**நவம்பர்-15** கொருக்குபேட்டை, திருவொற்றியூர், இராயபுரம், எண்ணூர் ஆகிய பகுதிகளில் மாதிரி மாநாடு நடத்தப்பட்டது. குழந்தைகள் மாநாடு குறித்த தகவல்கள், கலை நிகழ்வுகள், அனுபவபகிர்வுகள், கோரிக்கைகள் போன்றவை குழந்தைகள், ஆதரவாளர்கள், சமூகத்தினர் அனைவருக்கும் பகிர்ந்து கொண்டனர்.



**நவம்பர்-23** அருணோதயா குழந்தைகள் சங்க மாநாடு நேரு விளையாட்டு அரங்கம் மீடியா அரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 250 குழந்தைகள் கலந்து கொண்டு குழந்தைகளே இம்மாநாட்டை முன்னின்று நடத்தினார்கள்.




## டிசம்பர்

**டிசம்பர்–4** சிட்டெறும்பு பேசுது காலாண்டு மலர் போரில்லா உலகம் படைப்போம் என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது.




**டிசம்பர் – 26** அருணோதயா குழந்தைகள் சங்க ஒருங்கிணைப்பு கூட்டம் கொருக்குபேட்டையில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் 80 தலைவர்கள் கலந்து கொண்டு மாநாடு மதிப்பீடு செய்தனர். மேலும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்தும், குழந்தைகள் சங்கத்தில் கடைபிடிக்க கூடிய முக்கிய விஷயங்கள், தவிர்க்க வேண்டிய விஷயங்கள் குறித்து முடிவுகள் எடுத்தனர்.



**குழந்தைகள் சங்கத்தில் குழந்தைகள் செய்ய வேண்டியது மற்றும் தவிர்க்க வேண்டிய நடவடிக்கைகள்.**

குழந்தைகள் பங்கேற்பு உரிமையை சமூகத்தில் உறுதி செய்யும் பயணத்தில் குழந்தைகள் கவனமுடன் இருப்பது அவசியம். குழந்தைகள் சங்கத்தில் குழந்தைகளிடையே சிறுசிறு சண்டைகள், வேற்றுமைகள் சமீப காலமாக அதிகமாக காணப்படுவது நீங்கள் அறிந்ததே. அவற்றை எல்லாம் களைந்து குழந்தைகளாகிய நீங்கள் உங்கள் உரிமையை அடைய சில கோட்பாடுகள், சில கொள்கைகள் உங்கள் குழந்தைகள் சங்கத்தில் கொண்டு வருவது அவசியம், எனவே உங்கள் பிரதிநிதிகள் மூலமாக குழந்தைகள் அனைவரின் ஒட்டு மொத்த நலனை கருத்தில் கொண்டு உருவாக்கபட்டது தான் கிழே கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகள். இவற்றை பின் பற்றுவதின் மூலம் உங்களிடையே ஒற்றுமை வளரும். உங்கள் பங்கேற்பை சமூகத்தில் உறுதி செய்ய முடியும்.

**குழந்தைகளின் கருத்துக்கள்**

1. ஒருவர் பேசும் பொழுது மற்றவர் கவனித்தல்
2. மற்றவர் கருத்துக்கு மதிப்பளித்தல்
3. இடங்களை தூய்மையாக வைத்திருத்தல்
4. ஆண் பெண் சமத்துவம் கடைபிடித்தல்
5. இனகவர்சிக்கு இடம் கொடுக்காமல் இருத்தல்
6. போதை பொருட்களை பயன்படுத்தாமல் இருத்தல்
7. ஒருவரை ஒருவர் தொடாமல் பேசுதல் (டோன்ட்டச்)
8. கேலி, கிண்டல் செய்யாமல் இருத்தல், ஆபாசமான வார்த்தைகளில் யாரும் பேசக்கூடாது
10. ஒருவருக்கொருவர் சண்டையிட கூடாது
11. பெண் குழந்தைகளிடம் அத்து மீறாமல் பழகுதல்
12. டி, டா போட்டு பேசாமல் தோழா, தோழி என்று அழைத்தல்
13. கைபேசியை கூட்டங்களுக்கோ மற்றும் பயிற்சிகளுக்கோ எடுத்து செல்லுதல் கூடாது
14. உருவகேலி செய்யகூடாது
15. பங்கேற்பு அவசியம்
16. நேரம் கடைபிடிப்பது அவசியம்
17. மற்றவர்கள் பொருட்களை அபகரிக்க கூடாது.

**விதிமுறைகளை மீறும் குழந்தைகளுக்கு என்ன விதமான தீர்வு**

1. குழந்தையை அழைத்து பேச வேண்டும்
2. குழந்தைக்கு ஆலோசனை வழங்க வேண்டும்
3. தவறுகள் தொடர்ந்து நடக்குமாயின் குழந்தைகள் சங்கத்தை விட்டு நீக்க வேண்டும்
4. முக்கியமான நிகழ்வுகளில் குழந்தைகள் பங்கேற்பதை தடை செய்ய வேண்டும் அல்லது குறைக்க வேண்டும்.



**K. தங்கவித்யா**
கல்லூரி முதலாம் ஆண்டு. தண்டையார்பேட்டை

## கற்றலின் பெருமை

ஒற்றுமை மனதிலே ஊட்டி வைக்கும் பள்ளி !!
ஒழுக்கத்தை நடத்தையில் மிளிர வைக்கும் பள்ளி!!
கற்கும் ஆசை ஊற்றிவிடும் குருதியிலே அள்ளி
பொது அறிவு ஏற்றி வைக்கும் வாழ்வின் விடிவெள்ளி !!
அன்பாலே அரவணைக்கும் தமிழாசான் அருமை!!
என் மொழியின் புலமைதனை மனதேற்றும் புலமை !!
என் கணிதம் என்னுள்ளே புரிய வைத்த பெருமை !!
இயற்பியல் பொருளின் அருமைதனை அறியவைக்கும்!!
ஒளி வீசும் நம்வாழ்வும்!! படைத்திடுவோம் சரிதம்
தன் வாழ்வை ஏணியாக்கும் ஆசானின் தியாகம்!!
என் பள்ளி என்று சொல்ல நமக்கெல்லாம் யோகம் !!



**P. பொற்செல்வி**
8 ஆம் வகுப்பு, திருவொற்றியூர்

# மாநாடு எங்கள் மாநாடு மகிழ்ச்சியான மாநாடு

**உதயா குழந்தைகள் சங்க கூட்டம் செல்வதற்காக நடந்து போய் கொண்டு இருக்கிறான்.அப்போது அவன் தோழி பிரியாவை வழியில் சந்திக்கின்றான்.**

**உதயா:** பிரியா பிரியா நில் நானும்வருகின்றேன்

**பிரியா:** அட! உதயா இங்கே வாவா!! எங்கே செல்கின்றாய்

**உதயா:** இன்று இரண்டாவது சனிக்கிழமை பிரியா உனக்கு நினைவில்லையா நமது குழந்தைகள் சங்க கூட்டதிற்கு தான் போகிறேன்.

**பிரியா:** அடடே நானும் கூட்டத்திற்கு தான் வருகின்றேன். ஆமாம் நீ நமது மாநாட்டிற்கு சென்றாயா?

**உதயா:** நான் போகாமல் இருப்பேனா!! நம் பள்ளியில் குழந்தைகள் உரிமை குறித்து ஆய்வு செய்தோம் அல்லவா. அந்த அறிக்கையை வாசிக்கும் பொறுப்பேற்று இருந்தேன். அந்த பொறுப்பை நான் நல்ல படி செய்து முடித்தேன். ஆமாம் நீ வரவில்லையா?

**பிரியா:** நான் வரவில்லை, ஆனால் மாதிரி மாநாட்டில் கலந்து கொண்டேன். சரிசரி அங்கு என்ன நடந்தது என்று எனக்கு பகிர்ந்து கொள்கிறாயா?

**உதயா:** சொல்கின்றேன் கேள், நமது மாநாடு நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்றது. அந்த இடம் வரலாற்று சிறப்புமிக்க இடம். பல விளையாட்டு வீரர்களை உருவாக்கிய இடம். இதற்கு முன் நான் பார்த்தது இல்லை அவ்ளோ பெரியது.

**பிரியா:** அடடே நான் தான் வாய்ப்பை தவற விட்டேன் போல, பிறகு என்ன நடந்தது.

**உதயா:** குழந்தைகள் 250 பேர் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர், காலை நிகழ்வாக மாநாடும், மாலை குழந்தைகள் தின விழாவும் நடைபெற்றது. மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

காலையில் கண்காட்சி திறப்பு விழா நடைபெற்றது, நம் பள்ளி எப்படி இருக்க வேண்டும் என்று மிகவும் தெளிவாக காட்சிபடுத்தி மிகவும் பிரமாண்டமாய் இருந்தது. வந்த சிறப்பு விருந்தினர்கள் நம்மை பாராட்டினார்கள்.

நம் பள்ளி ஆய்வினை குறித்தும் நம் கோரிக்கைகளை நமது சிறப்பு விருந்தினரான திருமதி. பட்டுகோட்டை விஜயா மாநில குழந்தைகள் ஆணைய தலைவர் மற்றும் முனைவர். அனிதா, தலைவர், கல்வி மற்றும் வேலை வாய்ப்பு பிரிவு, மாநில திட்ட ஆணையம் அவர்களிடம் கொடுத்தோம். சிறப்பு விருந்தினர் அனைவரும் நம் மாநாட்டை கண்டு இரசித்தனர், பாரட்டவும் செய்தனர். அவர்களின் சிறிய வயது நினைவுகளை பகிர்ந்து கொண்டனர். மாநாட்டு கோரிக்கைகள் நிறைவேற நம் குழந்தைகளுக்கு வாழ்த்துக்களை கூறினார்கள்.

நமது குழந்தைகள் சங்கத்தில் நாம் ஒரு ஆண்டு செய்த சாதனைகளை குறும்படமாக எடுத்து அதை மாநாட்டில் வெளியிட்டோம். இந்நிகழ்வு நம் செயல்பாடுகள் குறித்து சிறப்பு விருந்தினருக்கு தெரிய ஒரு வாய்ப்பாக இருந்தது. மேலும் நம் குழந்தைகளின் அழகான அனுபவ பகிர்வுகள் இருந்தது. முன்னாள் குழந்தைகள் சங்க தலைவர் இந்நாள் சினிமாபட இயக்குனர் ஷெரிப் அண்ணாவோட பகிர்வு எனக்கு மிகவும் பிடித்தது. மேலும் அருணோதயாவின் அறங்காவலர் திரு.. பெர்னார்ட் டி'சாமி ஐயா அவர்கள் நம் குழந்தைகள் சங்க தலைவர் செல்வி. ஆயிஷா பாத்திமா அவர்களின் தலைமையுரை கேட்டு மிகவும் பாராட்டினார்கள். மேலும் நம் கண்காட்சி, கோரிக்கைகளை கேட்டு நம் குழந்தைகள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் கூறினார்கள்.

அருணோதயாவின் இயக்குனர் அவர்கள் குழந்தைகளுக்கு ஆதரவு அளித்ததுடன் பாராட்டுகளுடன் வாழ்த்துகளையும் தெரிவித்தார். மேலும் அருணோதயவின் அறங்காவலர் திருமதி.சுகந்தி அவர்களும் குழந்தைகளை பாராட்டி பேசினார்கள். அதுமட்டுமின்றி நமது மாநாட்டை பார்க்க 6வது வார்டு பிரதிநிதி, திரு. சீனிவாசன் மற்றும் ஏரியா தலைவர் திரு. ஏழுமலை அவர்கள் கலந்து கொண்டு குழந்தைகளை பாராட்டி வாழ்த்துகளையும் கூறினார்கள்.

**பிரியா:** சூப்பர் கேட்கும் போதே எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. மதிய உணவிற்கு பிறகு என்னவெல்லாம் நடந்தது.

**உதயா:** மதிய உணவு சாப்பிட்டோம். பிறகு உலக குழந்தைகள் தினவிழாவில் நமது குழந்தைகளின் நடன நிகழ்சிகள் கொண்டாட்டம் நடந்தது, நாடகம், நடனம், கரகாட்டம், பறையாட்டம், நாட்டுப்புற நடனம் என நிகழ்ச்சி கலைகட்டியது.

**பிரியா:** நம் குழந்தைகள் மாநாடு என்றால் சும்மாவா மிகவும் சிறப்பாக தான் நடந்துள்ளது. மிக்க நன்றி உதயா நீ சொன்னதை கேட்கும் போது எனக்கு நேரில் வந்தது போல உள்ளது. சரி சரி கூட்டம் நடைபெறும் இடம் வந்து விட்டது. இன்று மாநாடு குறித்து மதிப்பீடு தான் செய்யப் போகின்றோம்.

இருவரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



**ட.. யுவராணி**
12 ஆம் வகுப்பு. தண்டையார்பேட்டை





# குழந்தைகளின் கோரிக்கைகள்

அருணோதயா குழந்தைகள் சங்க மாநாட்டின் ஒரு நிகழ்வாக பள்ளியில் குழந்தைகள் உரிமைகள் எவ்வாறு உள்ளது என்று ஒரு சிறிய ஆய்வு நடத்தலாம் என்று நாங்கள் திட்டமிட்டு இருந்தோம். அதன்படி ஆய்வு எவ்வாறு நடத்த வேண்டும் என்ற தகவல்கள் அருணோதயா மூலம் குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டது. இதன் மூலம் 20 குழந்தைகள் ஆய்வு நடத்த முன் வந்தனர். பகுதியளவில் உள்ள 36 பள்ளிகளில் படிக்கும் மாணவர்களிடத்தில் ஆய்வு நடத்தினார்கள். இந்த ஆய்வில் வெளி வந்த தகவல்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து குழந்தைகளின் கோரிக்கைகளாக உருவானது. அக்கோரிக்கைகள் உங்கள் பார்வைக்கு.

**உயிர் வாழ்வதற்க்கான உரிமை**

- வகுப்பறைகள் காற்றோட்டம் உள்ளதாகவும், ஆரோக்கியமான சுற்றுச் சூழலுடன் குழந்தைகள் விரும்பும் வகையில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- கழிவறைகள் போதுமானதாகவும், சுத்தமானதகவும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- துப்புரவு பணியாளர்கள் பள்ளிகளில் நியமிக்க வேண்டும்.
- பள்ளியின் சுற்றுசூழல் தூய்மையாகவும், சுகாதார முறைப்படி இருத்தல் அவசியம்
- குழந்தைகளுக்கான ஓய்வு நேரங்கள் முறைப்படி ஒதுக்கிதர வேண்டும்.
- பள்ளிகளில் குடி நீர் சுத்தமானதவும், தரமானதாகவும் இருத்தல் அவசியம்
- ஆரம்ப பள்ளி முதல் மேல் நிலைபள்ளி வரை காலை உணவு வழங்க ஆவண செய்ய வேண்டும்.

**வளர்ச்சிக்கான உரிமை**

- குழந்தைகளின் விளையாட்டு உரிமை குழந்தைகளுக்கு கிடைப்பதை அனைத்து பள்ளிகளிலும் உறுதி செய்ய வேண்டும். பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மூலம் குழந்தைகளுக்கு விளையாட்டுப் பயிற்சி அளிக்க வேண்டும்.
- அனைத்து பள்ளிகளிலும் நூலகம் உள்ளதை உறுதி செய்ய வேண்டும். மாணவர்கள் நூலகம் சென்று புத்தகம் படிக்க நேரம் ஒதுக்க வேண்டும்.
- அனைத்து பள்ளிகளிலும் உள் அரங்கம் உள்ளதை உறுதி செய்ய வேண்டும்.
- அனைத்து வகுப்பிற்கும், குழந்தைகள் உரிமைகள் அறிந்த குழந்தை நேய ஆசிரியர்கள் நியமிக்க வேண்டும்.
- அனைத்து பள்ளிகளில் ஆய்வகம் மற்றும் கணினி வழி கல்வி உறுதி செய்ய வேண்டும்.
- அனைத்து குழந்தைகளுக்கும் சமமான பங்கேற்பு கொடுத்தல் அவசியம்.
- அனைத்துக் குழந்தைகளுக்கும் (18 வயது வரை உள்ள) இலவச கட்டாய கல்வியை சட்டமாக்க வேண்டும்.
- பள்ளி இடைவிலகல் மற்றும் தொடர்ந்து பள்ளிக்கு வராத குழந்தைகளை கண்டறிந்து அவர்கள் தொடர்ந்து பள்ளிக்கு வர வழிவகை செய்ய வேண்டும்.
- குழந்தைகளுக்கு தரமான கல்வியை வழங்க அரசு ஆவண செய்ய வேண்டும்.

**பாதுகாப்பு உரிமை**

- வகுப்பறையில் உள்ள பொருட்கள் மின்விசிறி, மின்சாரகடத்திகள், அமரும் பென்ச் அனைத்தும் பழுதடையாமல் குழந்தைகள் பயன்படுத்தும் வகையிலும், பாதுகாப்பாகவும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

- பள்ளி சுற்றுசுவர், நுழைவு வாயில் உயரமானதாகவும், பாதுகாப்பாக இருத்தல் அவசியம்.
- மழைநீர் பள்ளியின் உள்வாளகத்தில் நிரம்பாத அளவு கட்டமைப்பு செய்வது அவசியம்
- பள்ளி சீருடைகள் அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் அரசு அளிக்க ஆவண வேண்டும்.
- பள்ளிகளில் தண்டனைகள் கொடுப்பது, அடிப்பது போன்ற நிகழ்வுகள் நடைபெறாத வண்ணம் உறுதி செய்தல் அவசியம்.
- பள்ளியில் போதை பொருட்கள் கிடைப்பதை முற்றிலும் தடை செய்ய வேண்டும்.
- பள்ளிகளில் காவலாளிகளை நியமித்து குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.
- அனைத்து பள்ளிகளிலும் மனநல ஆலோசகர்களை நியமித்தல் வேண்டும்.
- பள்ளி குழந்தைகளை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கும் ஆசிரியர்களுக்கு தகுந்த நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்க வேண்டும்.
- மாற்று திறனாளி குழந்தைகளுக்கு பள்ளிகளில், கட்டமைப்பு மற்றும் முன் உரிமை கொடுக்க வேண்டும்.

**பங்கேற்பு உரிமை**

- மாணவர்கள் மனசு பெட்டி குறித்து பள்ளி மாணவர்களின் கருத்துக்களை கேட்டு அதன்படி முடிவெடுக்க வேண்டும்.
- பள்ளி நிகழ்வுகளில் குழந்தைகளின் கருத்துக்களை கேட்டு முடிவெடுக்க வேண்டும்.
- மாநில குழந்தைகள் கொள்கையில் உள்ளது போல அனைத்து பள்ளிகளிலும் மாணவர்கள் மன்றங்களை துவங்கி குழந்தைகள் பங்கேற்பை பள்ளியில் உறுதி செய்ய வேண்டும்.
- பள்ளி மேலாண்மை குழுவில் குழந்தைகள் பங்கேற்பை உறுதி செய்ய வேண்டும்.
- பள்ளியில் உள்ள குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டங்களை தொடர்ந்து நடத்தி குழந்தைகள் பங்கேற்பை உறுதி செய்ய வேண்டும்.
- பள்ளியின் முக்கிய முடிவுகளில் குழந்தைகளின் கருத்துக்கள் கேட்கப்பட வேண்டும்.
- பள்ளிகள் முன்னேற்றம், மாணவர்கள் முன்னேற்றம் குறித்து அரசு எடுக்கும் திட்டங்கள், முடிவுகளில், குழந்தைகள் கருத்துக்கள் கேட்கப்பட வேண்டும் .

மேற்கூறிய கோரிக்கைகளை அரசும், கடமையுடையவர்களும் நிறைவேற்று வீர்கள் என்ற நம்பிக்கையுடன் இந்த கோரிக்கையை சமர்ப்பிக்கின்றோம்.

**வாருங்கள் நாம் அனைவரும் ஒன்றிணைந்து குழந்தைகளின் கனவுப் பள்ளியை உருவாக்குவோம் கல்வி குழந்தைகளின் பிறப்புரிமை! குழந்தைகளின் உரிமையும் மனித உரிமையே!!**

**V.** சுஜிதா
12 ஆம் வகுப்பு, தண்டையார்பேட்டை





## குதூகலமான மாநாடு

நான் முதன் முறையாக மேடையில் பேசினேன். அது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. நான் எனது பள்ளியில் இருந்த கோரிக்கையை பேசினேன். நான் முதல் முதலாக நேரு விளையாட்டரங்கை பார்த்தேன், மிகவும் அழகான இடம், நான் நினைத்து கூட பார்க்கவில்லை நான் அங்கு செல்வேன் என்று. .அங்கு இருந்த ஒரு நாள் முழுக்க நான் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தேன். அது மட்டும் இல்லாமல் எனக்கு மிகுந்த நண்பர்கள் கிடைத்தார்கள்.

எனது கனவு பள்ளி எப்படி இருக்க வேண்டும் என்பதையும் நான் அறிந்தேன். அங்கிருந்து எல்லா கண்காட்சியும் எனக்கு பிடித்திருந்தது



**S. லோகேஸ்வரி**
8ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை

## மாநாட்டில் எனக்கு பிடித்தவை

- நான் முதன் முறையில் வேடமிட்டு நாடகம் நடிக்கையில் அது எனக்கு பிடித்தது .
- நேருவிளையாட்டு அரங்கம் மிகவும் பிடித்தது.
- அனைத்து குழந்தைகளிடம் பழகியது எனக்கு பிடித்தது .
- பேருந்து பயணம் செய்தது மிகவும் பிடித்தது.
- அங்கு வந்த சிறப்பு அழைப்பாளர்கள் பேசியது மிகவும் பிடித்தது .
- அங்கு குழந்தைகள் வைத்த கண்காட்சி எனக்கு மிகவும் பிடித்தது.
- கலை நிகழ்ச்சிகள் எனக்கு மிகவும் பிடித்தது.



**K. செல்வகணேஷ்**
8ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை

## மாதிரி மாநாடு

நவம்பர்- 1 4 குழந்தைகள் தினவிழ அன்று திருவொற்றியூர் களப்பணி அலுவலத்தில் மாதிரி மாநாடு நடத்தினோம். 60 குழந்தைகள் இந்த மாதிரி மாநாட்டில் கலந்து கொண்டனர். மேலும் மாமன்ற உறுப்பினர், பகுதிதலைவர், சுயஉதவிக்குழு தலைவர்கள், பெற்றோர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

நாங்கள் மாநாட்டிற்காக தயார் செய்திருந்த போதை குறித்த விழிப்புணர்வு மௌன மொழி நாடகம், குழந்தைகள் நடனம், கோரிக்கைகள், குழந்தைகள் சங்கத்தில் தான் பெற்ற பயிற்சி குறித்த அனுபவ பகிர்வுகள் போன்ற நிகழ்வுகள் நிகழ்த்தி காட்டினோம். மாநாடு குறித்த தகவல்களையும், எனது கனவு பள்ளி குறித்த ஆய்வு முடிவுகளையும் அனைவருக்கும் பகிர்ந்து கொண்டோம். நமது இளைஞர்கள் குழந்தைகளுக்கு போட்டிகள் வைத்து பரிசுகளையும் கொடுத்தனர். எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது எங்களின் மாதிரி மாநாடு.





**V.சுஜிதா**
12 ஆம் வகுப்பு, திருவொற்றியூர்

## நேரு வேடம்

நேரு விளையாட்டு அரங்கில் மாநாடு நடைபெறுவதால் நேரு மாமா போல் வேடம் இட்டு நிகழ்ச்சி தொகுப்பு செய்யலாம் என்று முடிவு செய்தேன். ஆனால் அவரை போல் நடிக்க முடியுமா என்று நினைத்தேன், ஆனால் நான் முடிவு செய்து விட்டேன். நான் நேருவைப்போல நடப்பதற்கு பேசுவதற்கு யூடியூப் பார்த்து கற்றுக் கொண்டேன். ஆனால் என்னால் அப்படி நடக்க பேச முயற்சி செய்தும் அப்படி நடக்க முடியவில்லை அதனால் அவர் அன்பும் பண்பாக பேசுவது, சிரித்த முகத்துடன் இருப்பது, குழந்தைகளை நேசிப்பதையும் கற்றுக் கொண்டேன் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. ஒரு அளவிற்கு என்னால் பேச முடிந்தது. ஒரு மறக்க முடியாத அனுபவமாக எனக்கு இருந்தது.



**D. சந்தோஷ்**
12 ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை

## நீரா ஆர்யா



நமது இந்திய விடுதலைப் போராட்டத்தில் எண்ணற்ற வீரர்கள் வீராங்கனைகள் தன்னலம் கருதாது நம் தாய் நாட்டுக்காக உயிர் உடமை தியாகம் செய்துள்ளனர். அவர்களுள் கடைசிவரை வெளிச்சத்திற்கு வராமலே போனவர்கள் பலரில் ஒருவர் தான் நீரா ஆர்யா. பெரும் செல்வந்தரின் மகளாக உத்தரப்பிரதேச மாநிலத்தில் நீரா ஆர்யா பிறந்தார். கொல்கத்தாவில் கல்வி பயில அனுப்பி வைத்தனர் பெற்றோர் கல்வி பயில சேர்ந்த இடத்தில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் இந்திய தேசிய ராணுவத்தில் இணைந்து இரகசியமாக பணியாற்றி வந்தார். திருமண வயதை எட்டிய போது அவருடைய தந்தை ஆங்கில அரசின் புலனாய்வு துறையில் பணிபுரிந்த வரை நீரா ஆர்யாவிற்கு திருமணம் செய்து வைத்தார். எதிரெதிர் துருவங்களாக இருவரின் வாழ்க்கையும் ஆரம்பிக்கப்பட்டது.

திருமண வாழ்வின் ஆரம்பத்திலேயே மனக்கசப்பும் உருவாகின. ஒரு கட்டத்தில் மீராவுக்கு ராணுவத்துக்கும் இடையே இருந்த தொடர்பை அவரின் கணவர் கண்டு பிடித்து விட்டார். ஆங்கிலேய அரசு குறித்து உளவு பார்த்து முக்கிய தகவல் ஒன்றை நேதாஜியிடம் பகிர்வதற்காக நேரில் சென்ற அவரை பின் தொடர்ந்த அவரது கணவர் நேதாஜியின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து விட்டார்.

அவரை நோக்கி துப்பாக்கியால் சுட்டார் அந்த குண்டு வெடிப்பில் நேதாஜியின் டிரைவர் காலமடைந்தார். நேதாஜியை காப்பாற்ற துடித்த நீரா ஆர்யா அந்த நேரத்தில் கணவரையே கத்தியால் குத்தி கொலை செய்து விட்டார். அதற்காக நீரா ஆர்யாவிற்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டது. சொல்ல முடியாத அளவுக்கு சிறையில் சித்திரவதைகள் செய்து நேதாஜி இருப்பிடத்தை கேட்டனர். கடைசி வரை வாய் திறக்காமல் தன்தாய் நாட்டின் சுதந்திர கனவில் வாழ்நாள் முழுவதும் சிறையில் கழித்தார். சுதந்திரம் பெற்ற பிறகு விடுதலைப் போராட்ட வீராங்கனைகளை போல நீரா ஆர்யாவும் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார். இறுதியில் நோய் வாய்ப்பட்ட அவர் தன் இன்னுயிரை நீத்தார். சுதந்திரத்தை தன் மூச்சாக கொண்டு வாழ்ந்த நீரா ஆர்யாவின் தியாகம் வரலாற்றில் அவ்வளவாக பேசப்படவில்லை.



**R. தன்மயா**
8 ஆம் வகுப்பு, இராயபுரம்

## நமது பள்ளி நமது பொறுப்பு

வணக்கம் நான் சென்னை உயர்நிலை ப்பள்ளி, புதுவண்ணாரபேட்டை பள்ளியில் பள்ளி மேலாண்மை குழுவில் ஒரு உறுப்பினராக உள்ளேன். என் பள்ளியை எனக்கு மிகவும் பிடிக்கும். அங்கு பயிலும் மாணவர்கள் நன்றாக படிக்க வேண்டும், பாதுகாப்புடன் இருக்க வேண்டும் என்று நான் எப்போதும் விரும்புவேன். அதற்காக என் நேரத்தை செலவிட்டுப் பள்ளியில் நிர்வாகத்துடன் இணைந்து செயல்படுவேன். பள்ளி மேலாண்மை குழுவில் அருணோதயா பணியார்களும் உறுப்பினராக உள்ளனர். அவர்கள் மூலம் பள்ளி மாணவர்கள் மேம்பாடு அடைவதற்கான திட்டங்களை வகுப்போம்.

அதன்படி அருணோதயா மூலமாக வளரிளம் பருவ குழந்தைகளுக்கு விழிப்புணர்வு நிகழ்வுகள் பள்ளியில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. ஆலோசனை தேவைபடும் குழந்தைகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டு குழந்தைகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டு வருகிறது.

தேசிய திறனாய்வு தேர்வு முன் தயாரிப்பாக 50 குழந்தைகளுக்கு திறன் வளர்ப்பு வகுப்புகள் நடத்தப்பட்டது. இதில் கலந்துக் கொண்ட 50 குழந்தைகளும் தேர்வு எழுதி உள்ளனர்.

பள்ளிகளில் நிகழும் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். வில்லுபாட்டு நிகழ்ச்சியில் பங்கு பெறும் மாணவர்களுக்கு பயிற்சி அளித்து அவர்கள் மாவட்ட அளவு தேர்ச்சி பெற்றனர். பள்ளி மேலாண்மைகுழு உறுப்பினர்கள் பள்ளியில் பிரச்சனைகள் நடந்தாலும் அருணோதயா பணியாளர்களை தொடர்பு கொண்டு ஆலோசனை கேட்டு அதன்படி முடிவுகளை மேற்கொள்வோம்.

தொடர்ந்து பள்ளியின் முன்னேற்றதிற்கு பாடுபடுவேன், குழந்தைகள் பங்கேற்பை பள்ளியில் உறுதி செய்வேன். நன்றி

**M. அரவிந்த்**
பள்ளி மேலாண்மைகுழு, புதுவண்ணாரப்பேட்டை



# எங்களின் கண்ணை கவரும் கண்காட்சி

நவம்பர் 23.11.2026 அன்று நேரு உள் விளையாட்டு அரங்கத்தில் உள்ள ஊடக மண்டபத்தில் எனது கனவு பள்ளி என்ற தலைப்பில் அருணோதயா குழந்தைகள் சங்க மாநாடு நடைபெற்றது நாம் அறிந்ததே.

நம் அனைவரின் கனவுகளும் பள்ளியில் தான் தொடங்கும். அந்த பள்ளி எப்படி இருக்க வேண்டும் என்று எங்கள் அருணோதயா குழந்தைகள் சங்க உறுப்பினர்கள் எனது கனவு பள்ளி என்ற தலைப்பில் கண்காட்சி வைத்து இருந்தனர். பள்ளி என்பது வெறும் கற்கள், சுவர்,பென்ச் மட்டும் இல்லை. அது மாணவர்களின் குட்டி மனசு, எதிர்காலகனவு, மகிழ்ச்சி,வெற்றி,சுயமரியாதை போன்றவையும் அதில் அடங்கும், அவர்களின் கனவுகள் விருப்பங்களை அப்படியே காண்பவரின் கண் முன்னே கொண்டு வந்து காட்சிபடுத்தி இருந்தனர். நூலகம், விளையாட்டு மைதானம், சத்துணவு கூடம், ஆய்வுக் கூடம், பள்ளியின் கட்டமைப்பு, கணினி வகுப்பு போன்ற மாதிரிகளை வெகு அழகாக அமைத்து இருந்தனர்.



அதுமட்டுமின்றி அவற்றை காண வந்த பார்வையாளர்களுக்கு அவர்கள் உருவாக்கிய மாதிரிகளை குறித்து பகிர்ந்து கொண்ட விதம் மிகவும் உணர்ச்சி பூர்வமாக இருந்தது. திருமிகு பட்டுகோட்டை விஜயா, தலைவர் தமிழக குழந்தைகள் உரிமை ஆணையம், திருமிகு அனிதா, தலைவர், மாநில திட்டக்குழு, கல்வி மற்றும் வேலை வாய்ப்பு பிரிவு அவர்களும் குழந்தைகளின் கண்காட்சியை பார்த்து பிரமித்தனர். குழந்தைகளை பாராட்டி சென்றனர்.

எங்கள் பள்ளி எங்கள் எதிர்காலம், கல்வி எங்கள் உரிமை போன்ற பல வாசகங்களை அரங்கம் முழுவதும் எழுதி காட்சிபடுத்தி இருந்த விதம் சிறப்பாக இருந்தது. குழந்தைகளின் கனவுகளுக்கு உயிர் கொடுத்து அவற்றை காட்சி படுத்தி இருந்த விதம் உயிரோட்டமாக இருந்தது.



**R. யுவஸ்ரீ**
11 ஆம் வகுப்பு, இராயபுரம்

# பள்ளியை குறித்து குழந்தைகளின் எதிர்பார்ப்பு

எனது பள்ளியில் விளையாட்டுப் பொருட்கள் அதிகமாக வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களிடம் அன்பாக பழக வேண்டும். ஆசிரியர்கள் என் பிரச்சனையை தீர்ந்து அதை சரிப்படுத்த வேண்டும். எனது பள்ளியில் பூக்கள் வளர்க்க வேண்டும். எனது பள்ளியில் குடிநீர் வசதி வேண்டும். எனது பள்ளி கழிவறை சுத்தமாக இருக்க வேண்டும். எனது பள்ளி வகுப்பறைகள் குப்பையாக இருக்கிறது, அதை சுத்தப்படுத்த வேண்டும். காலை உணவு திட்டம் அனைத்து மாணவர்களுக்கும் கொடுக்க வேண்டும். மாணவர்கள் வீட்டுப்பாடங்களை முடிக்காமல் வந்தால், காயப்படுத்தாமல் அன்பால் தீர்க்க வேண்டும். எனது பள்ளியில் விளையாடும் நேரத்தில் கண்டிப்பாக விளையாட அனுமதிக்க வேண்டும்..

பள்ளிக்கு தாமதமாக வரும் போது எங்களை வெளியே நிற்க வைத்து அவமானபடுத்தாமல் உள்ளே அனுமதிக்க வேண்டும்.

பள்ளியில் காலை கூட்டத்தில் செய்தித்தாள்களை வாசிக்க வாய்ப்பு கொடுக்க வேண்டும். மாணவர்கள் அனைவரையும் பெற்றோர்கள் பள்ளிக்கு சரியாக அனுப்ப வேண்டும்.





**K. சந்தியா**
7 ஆம் வகுப்பு, கொருக்குப்பேட்டை

# கவர்ஸ்டோரி



## எங்கள் பெருமைக்குரிய பள்ளி

நான் படிக்கும் பள்ளி என் மாவட்டத்தின் மிகச்சிறந்த மற்றும் மிகப்பெரிய பள்ளிகளில் ஒன்று. இப்பள்ளியில் பல்லாயிரக்கணக்கான வல்லுநர்களையும், அரசு மற்றும் தனியார் அதிகாரிகளையும், ஆசிரிய பெருமக்களையும், மருத்துவர்களையும், பொறியாளர்களையும் உருவாக்கி உள்ளது. இப்பள்ளியில் படிக்க எனக்கு வாய்ப்பு கிடைத்ததே நான் பெற்ற பேறு.

### இருப்பிடமும் நிர்வாகமும்

நான் படிக்கும் பள்ளி பல கிராமங்களை உள்ளடக்கிய ஒரு பஞ்சாயத்தில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப் பள்ளி ஆகும். இப்பள்ளியில் போதுமான வெளிச்சமும் தூய்மையான காற்றோட்டமும் கொண்ட பெரிய அறைகள் பல உள்ளன.

பள்ளியில் மிகப்பெரிய நூலகமும், பல மொழிகளில் எழுதப்பட்ட பல மதிப்புமிக்க புத்தகங்களும் உள்ளன. இந் நூல்களை நன்கு பயன்படுத்திய அனைவரும் எம் பள்ளியிலிருந்து சிறப்பு பெற்றவர்கள் ஆவார்கள். எங்கள் பள்ளியில் கால்பந்து, மட்டைப்பந்து, கைப்பந்து, கூடைப்பந்து விளையாட்டு மைதானங்கள் பல உள்ளன. என் பள்ளி அறிவாளிகளை மட்டும் இன்றி பல தடகளை வீரர்களையும் உருவாக்கி சாதித்துள்ளது. அனைத்திற்கும் மேலாக எங்கள் பள்ளியில் தலைசிறந்த மற்றும் அனுபவமிக்க ஆசிரியர்களும் பணி புரிகின்றனர்.

எங்கள் பள்ளியின் சாதனைகள், முதல்வரின் அறையிலும், அலுவலக அறையிலும் இடம் பெற்றிருக்கும் கேடயங்களும் விருதுகளுமே அதன் சாதனைகளுக்கு சாட்சிகள் ஆகும். ஆண்டுதோறும் மாநில அளவில் சிறப்பு இடம் பெறுபவர்களில் என் பள்ளி மாணவர்களும் அடங்குவர். அவர்களின் பெயர்கள் அறிவிப்பு பலகையில் சிறப்பான இடம் பெற்றிருக்கும்.

### விழுமியங்கள்

சுத்தம் சுகம் தரும் என்னும் பழமொழிக்கு உதாரணமாக விளங்குகிறது என் பள்ளி. குப்பைத்தொட்டி இன்றி வேறு எவ்விடத்திலும் கிழிந்த தாள்களோ குப்பைகளோ, எச்சிலோ காண முடியாது. அவ்வளவு தூய்மையாக இருக்கும்.

எங்கள் பள்ளி சோலைவனம் போலவும், பூங்கா போலவும் காட்சியளிக்கும். குளிர்ந்த காற்று வீசக்கூடிய பெரிய பெரிய மரங்கள் என் பள்ளி கட்டிடத்தில் அருகில் உள்ளன. கடமை கண்ணியம் கட்டுப்பாடு போன்றவை எமது உயர்வான விழுமியங்கள், இதனை என் பள்ளி பெயரை வைத்தும், மாணவர்கள் வருகின்ற போது பேரவைக்கு முன்னாளும், பேரவையின் போதும் பேரவை களைந்து செல்லும் போதும் வகுப்பறைகளில் இருக்கும் போதும் விளையாட்டுத் திடலில் இருந்து வகுப்பறைக்கு செல்லும் போதும் காணலாம்.

### நாட்டுப் பணியில் எம் பள்ளி

எம் பள்ளியில் மாணவர்கள் சாரண சாரணியர் படை, என்.சி.சி போன்ற அமைப்புகள் உள்ளன. பல மாணவர்கள் அதில் பங்கு பெற்று சாலைப் போக்குவரத்து தடையின்றி நடைபெறவும், வெள்ளம் நில நடுக்கம் போன்றவற்றால் ஏற்படும் பாதிப்பு நேரங்களில் மக்களுக்கு நிவாரணம் மற்றும் தன்னார்வ பணிகள் செய்து தரவும் உதவியுள்ளனர். பல விதமான விழிப்புணர்வு பேரணிகள் நடத்தி தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

### முடிவுரை

மேற்குறிப்பிட்டவற்றை எழுதும் போது உள்ளம் மகிழ்ச்சியில் திளைக்கிறது. இப்பள்ளியில் படிக்கும் வாய்ப்பு அடியேனுக்கு கிடைத்தது அரும்பெரும் பேறு. அதற்கு என்றும் நான் நன்றி கடன் பட்டிருப்பேன் என்னால் என் பள்ளி பெருமை பெற நானும் முயற்சிப்பேன் நீங்களும் முயற்சி செய்தால் நன்றி...

**கனவாக இருந்தாலும்** படிக்கும் போதே மிகுந்த ஆசை தோன்றுகிறது அல்லவா? முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை, இவ்வளவு சிறப்பு வாய்ந்த முன் மாதிரி பள்ளியை உருவாக்கி அதில் எம் மாணவர்களின் விழுமியங்கள், மதிப்பீடுகள், நம்பிக்கைகள் அனைத்தும் பெறப்பட்ட பள்ளியை அரசு, மாணவர்கள், ஆசிரியர்கள், சமூகத்தினர் அனைவரும் ஒன்றிணைந்து உருவாக்குவோம்.

**K. கலைச்செல்வி**
10 ஆம் வகுப்பு. திருவொற்றியூர்



# எனது கனவு பள்ளி ! எனது கனவு !

பள்ளியில் ஆசிரியர்கள் மிகவும் அன்பாகவும், பாசமாகவும் இருப்பார்கள். எனது ஆசிரியர்களை எனக்கு மிகவும் பிடிக்கும். எனது பள்ளியில் மிகவும் சுத்தமாகவும் தூய்மையாகவும் இருக்கும். என் பள்ளி மிகவும் அமைதியாகவும் இருக்கும், அழகாகவும் இருக்கும். என் பள்ளியில் விளையாட ஒரு மைதானம் இருக்க வேண்டும். அந்த மைதானத்தில் அனைத்து வகையான விளையாட்டு பொருட்களும் இருக்க வேண்டும், கால்பந்து, மட்டைப்பந்து, விளையாட்டுகள் விளையாட வேண்டும். பள்ளியில் தையல், கராத்தே, பாடல், பரதநாட்டியம், வரைதல் போன்ற பயிற்சிகளை கொடுக்க வேண்டும்.



**K.ஹரிணி**
9 ஆம் வகுப்பு, இராயபுரம்

## என் பள்ளி

என் பள்ளியில் ஆண் பெண் வித்தியாசமின்றி சமமாகவே இருப்போம். நாங்கள் எல்லோரும் பணிவாகவும் நண்பர்களாகவும் இருப்போம். என் ஆசிரியர் என்னிடமும் என் நண்பர்களிடமும் அன்பாகவும், பாசமாகவும் இருப்பார். பள்ளியில் மிகப்பெரிய மைதானம் இருக்கும். அங்கு நாங்கள் அனைவரும் பாசமாக அன்பாக இருந்து விளையாடுவோம். இது தான் நான் விரும்பும் பள்ளி.

**“ அறிவு என்னும் அமுதசுரபி நிறையும் புனிதமான இடம் கல்வி என்னும் மலர் பூத்துக் குலுங்கும் இடம் என்பள்ளி”**



**U. தனலட்சுமி**
8 ஆம் வகுப்பு, எண்ணூர்

## ஒரு மாணவனின் கற்பனை

என் பள்ளியில் மாணவ மாணவர்கள் அனைவரும் தங்களுக்கு பிடித்த வேலைகளை செய்ய முடியும், குழந்தைகளின் கருத்துக்களை கேட்க அங்கு இடம் இருக்கும். ஒவ்வொரு மாணவரின் விருப்பங்களை புரிந்து நடந்து கொள்ளும் ஆசிரியர்கள், பாடங்கள் அனைத்தும் வகுப்பறையில் நடக்காமல் இயற்கை சுற்றுச் சூழலுக்குள் நடக்கும், இது மாணவர்களின் மன நிம்மதியை மேம்படுத்த ஒரு முக்கியமான செயற்பாடாக இருக்கும். மாணவர்களின் கருத்து பள்ளி விதிமுறைகளில் கேட்கப்படவேண்டும்.. இந்த கருத்து கேட்டல் நிகழ்வு மாணவர்கள் மற்றும் அவர்களை சுற்றியுள்ள சூழலுக்கு நலன் விளைவிப்பதாக இருக்கும். இந்த பள்ளி மாணவர்களின் சிறைச்சாலையாக இல்லாமல் மாணவர்களின் சொர்க்கமாக இருக்கும். விளையாட்டு மைதானத்தில் உள்ள மரங்களில் வாழும் பூங்குயில் கூவும் சத்தம் செவியில் தேன்சுரப்பது போல் இருக்கும். மாணவர்கள் அங்கு வாழும் சிறு உயிரினங்களும் குழந்தைகளோடு சேர்ந்து மகிழ்ந்து ஆடி பாடி வாழும். இப்படிப்பட்ட ஒரு பள்ளி மாணவர்களின் வாழ்வில் வந்தால் அவர்கள் இனிய இந்த இளம் பருவத்திலே மகிழ்ந்து இருக்க இந்த பள்ளி உதவும்.



**D. பிரிதிவிராஜ்**
11 ஆம் வகுப்பு, எண்ணூர்

## என் ஆசை

நான் விரும்பும் எனது பள்ளியில் நல்ல ஆசிரியர்கள் இருக்க வேண்டும் எனது பள்ளியில் எப்போதும் கல்வியைக் கற்றுத் தர வேண்டும். என் பள்ளியில் ஒழுக்கத்தையும் கற்றுக் கொடுக்க வேண்டும்.நான் நல்ல மாணவராக இருப்பேன். நான் எப்போதும் ஆசிரியருக்கு மரியாதை கொடுப்பேன். மாணவர்கள், மாணவிகள் எல்லோரும் சமமாக பார்ப்பேன். உடற்பயிற்சி ஆசிரியர் பள்ளியில் இருக்க வேண்டும். பள்ளியில் ஏதேனும் நிகழ்வுகள் நடக்கும் போது குழந்தைகள் பள்ளியை அவர்கள் விரும்பிய வண்ணம் அலங்கரிக்க அனுமதி வேண்டும். எனது பள்ளியில் நான் எப்பொழுதும் சிறுசிறு குறும்புகள் செய்வேன். இவையெல்லாம் பள்ளியில் இருந்தால் தான் நன்றாக இருக்கும்.



**R.சஞ்சீவ் குமார்**
9 ஆம் வகுப்பு, எண்ணூர்

## படகு

கல்வியை கற்போம்
கனவை நினைவாக்குவோம்.
கல்வி என்னும் கடலில்
பள்ளி என்னும் படகில்
ஆசிரியர் என்னும் கப்பலில்
நாம் பயணம் செய்தால் வெற்றி
நிச்சயம்



**S.N. விக்னேஷ்**
9 ஆம் வகுப்பு,திருவொற்றியூர்

## பூந்தோட்டம்

இந்த உலகத்திற்கு பல ஒழுக்கமுள்ள மனிதர்களை உருவாக்கும் பயிற்சிக் கூடம் தான் பள்ளிக்கூடம். எங்கள் பள்ளியில் பார்ப்பவர்களை கண் கவரும் அளவிற்கு மரங்களும், செடிகளும், ,பூந்தோட்டங்களும் நிறைந்திருக்கும். எனது பள்ளியில் மிகப்பெரிய விளையாட்டு மைதானம் உள்ளது. என் பள்ளி வளாகம் எப்பொழுதும் குப்பைகள் இல்லாமல் தூய்மையாகவும் குப்பைகளை போடுவதற்கு குப்பை தொட்டிகளும் உள்ளன. எனது பள்ளியில் மாணவர்களுக்கு தேவையான குடிநீர் வசதி உள்ளது. எங்கள் வகுப்பறைகள் மிகவும் வெளிச்சமுடன் காற்றோட்டமாகவும் இருக்கும். இங்கு மாணவர்களின் படிக்கும் சத்தம், சிரிக்கும் சத்தம், ஆசிரியர்களின் அன்பான குரல்களும் கேட்டு கொண்டே இருக்கும். நன்றி

**B. லோகேஷ்**
9 ஆம் வகுப்பு, திருவொற்றியூர்



## மாதிரி பள்ளி

ஆசிரியர்கள் மாணவர் மற்றும் மாணவியரிடம் அன்பாக இருக்கிறார்கள். எங்களை அவர்கள் பிள்ளை போல் பார்த்துக் கொள்கிறார்கள். நாங்கள் எனது ஆசிரியர்களை அன்பாக பார்த்துக் கொள்கிறோம். புத்தகத்தை வைத்து சொல்லிக் கொடுக்காமல் விளையாட்டு மற்றும் கதைகள் மூலம் எங்களுக்கு சொல்லிக் கொடுப்பார்கள். பள்ளியில் உள்ள பூங்காவில் ஆசிரியர்களுடன் நாங்கள் விளையாடுவோம். அதுபோல் உணவும் கொடுக்கிறார்கள். அந்த உணவு மிகவும் சுவையுடன் எங்களுக்கு பிடித்தது போல் இருக்கும். ஆசிரியர்களுடன் இணைந்து நாங்கள் அருந்துவோம். பள்ளியில் விழாக்கள் வரும்பொழுது ஆசிரியர்களுடன் இணைந்து விழாவைக் கொண்டாடுவோம். ஆசிரியர்கள் எப்போதும் எங்களது கருத்தையும் எங்களது விருப்பங்களையும் கேட்பார்கள். அது எங்களுக்கு மிகவும் பிடிக்கும். இது போன்று என் பள்ளி அமைய வேண்டும் என்று நான் மிகவும் ஆசைபடுகிறேன்.

**S. அபிநயா**
7 ஆம் வகுப்பு, எண்ணூர்





# கற்பனை பள்ளி

மாணவர்களுக்கு காலை பள்ளி மணி அடிக்கும் போது பயம் வரும். இன்னும் சிலருக்கு சலிப்பாக இருக்கும் .ஆனால் என் கனவு பள்ளியில் அப்படி பயம் ஏதும் வராது, சலிப்பாகவும் இருக்காது. ஒரு புதிய நாளை துவங்குகிறோம் என்ற எண்ணம் வரும்.

அந்த பள்ளி ஒரு வெறும் கட்டிடம் இல்லை இது என் கனவுகளுக்கான இடம். அந்த பள்ளிக்குள் நுழையும் போதே எல்லாமே வேறு மாதிரி இருக்கும். மனசுக்கு அமைதியா இருக்கும். ஆசிரியர்கள் கோபமாக நிற்க மாட்டார்கள். எப்படி இருக்கேன் என்று கேட்டு வரவேற்பார்கள், அப்போது பள்ளி உணர்வு உண்டாகும்.

ஆசிரியர்கள் பாடம் கரும்பலகையில் நடத்த மாட்டார்கள் 3D மின்சார பலகையில் பாடம் நடத்துவார்கள். எங்கள் கண் முன் வந்து பாடங்களும் படங்களும் போய் எங்கள் நினைவில் நிற்கும்.

எனது கனவு பள்ளியில் தேர்வு என்பது எந்த வகையிலும் இருக்காது. மதிப்பெண்களும் இருக்காது. என்னுள் இருக்கும் திறமைகள் அனைத்தையும் கண்டறிந்து ஆசிரியர்கள் ஊக்கப்படுத்துவார்கள்.

அந்தப் பள்ளியில் எல்லா வகை விளையாட்டுப் பயிற்சி நடைபெறும். விளையாடும் போது நாம் தோல்வியை ஏற்றுக்கொள்ள கற்றுக் கொள்வோம். முடிவு இல்லை இது ஒரு புதிய துவக்கம் என்பதை அங்கே புரிந்து கொள்வோம். நூலகம் அந்த பள்ளியில் இருக்க வேண்டும். எல்லோரும் சமம், பெண் குழந்தைகள் தைரியமாகவும் பாதுகாப்பாகவும் பள்ளிக்கு வருவார்கள். ஒரு வீட்டை போல நிம்மதி, பள்ளிக்கு நாம் பாடம் மட்டும் சார்ந்த விஷயங்களை தவிர வாழ்க்கையும் கற்றுத் தரும் கல்வி இருக்கும். சமுதாயத்துக்கு பயனுள்ள கல்வியாக இருக்க வேண்டும்..

பள்ளியை விட்டு வெளியே வரும்போது புத்தகப்பையில் புத்தகங்கள் மட்டுமின்றி மனதில் நம்பிக்கையும் இருக்கும். பள்ளி வெறும் படிக்கும் மாணவர்களை உருவாக்குவதுடன், நல்ல மனிதராக உருவாக்க வேண்டும். ஒருநாள் நான் இந்த பள்ளியில் தான் படித்தேன் என்று பெருமையாக சொல்லத் தோணும்.

**S.** விஷால்
கல்லூரி முதலாம் ஆண்டு, எண்ணூர்



# பூங்கா



அன்று நீ என் கண்களுக்கு
சிறைச்சாலையாக தெரிந்தாய் !!
இன்றோ நீ அழகான பூங்கா என்பதை
உணர்கிறேன் !!
அன்று நீ வெறும் கட்டிடங்களாக
தெரிந்தாய்!!
இன்று அனைத்தும் கோபுரங்கள் என்பதை
உணர்கிறேன் !!
அன்று உன் வகுப்பறைகள் எனக்கு
சிறைச்சாலைகள்!!
இன்று நான் உணர்ந்தேன் சிறைச்சாலை
இல்லை !!
என் தாயின் கருவறை என்று!!

**S.** பூஜாஸ்ரீ
11 ஆம் வகுப்பு, இராயபுரம்





# எனது மாநாடு

அனைவருக்கும் வணக்கம் என் பெயர் ஆயிஷா பாத்திமா நான் அருணோதயா குழந்தைகள் சங்கத்தின் கூட்டமைப்பு தலைவராக உள்ளேன். இது தான் அருணோதயாவின் மாநாட்டில் நான் முதன்முறையாக பங்கேற்ற தருணம். அங்கு நடந்த கண்காட்சிகள் அனைத்தும் அனைவரையும் பிரமித்து பார்க்க வைத்தது. என்னை மிகவும் ஆச்சரியம் அடைய செய்தது. குழந்தைகளுக்குள் இருந்த திறமையை வெளிக் கொண்டு வந்து அதை அனைவருக்கும் வெளிக்காட்டும் இடமாக அந்த மாநாட்டின் மேடை திகழ்ந்தது. ஒவ்வொரு குழந்தைகளும் வெவ்வேறு திறமை உடையவராக இருந்தனர். அங்கு வந்த சிறப்பு விருந்தினர்கள் அனைவரும் சிறப்புரை ஆற்றியது குழந்தைகளின் மனதில் பதியும் வகையில் இருந்தது, அவர்களுக்கு ஏற்றவாறு உரை நிகழ்த்தினார்கள்.



குழந்தைகளின் கலைத் திறமைகள் அனைத்தும் மிகவும் அழகாக இருந்தது. எனக்கு கிடைத்த அனுபவங்களில் இதுதான் மிகவும் அற்புதமான மற்றும் அழகான அனுபவம். அனைத்து குழந்தைகளின் எண்ணமும் ஒவ்வொரு கோணத்தில் சிந்திக்க வைத்தது. .அவர்களின் கனவு பள்ளியில் ஒவ்வொன்றும் மிகவும் அழகானதாக இருந்தது. அவர்களின் கற்பனை, எண்ணம், எல்லாவற்றுக்கும் மேலாக அவர்கள் கனவு இவை அனைத்தும் ஒன்றாக சேர்ந்தது தான் அந்த மாநாடு. அதற்கு தான் “ எனது கனவு பள்ளி” என்ற தலைப்பு அந்த மாநாட்டிற்கு வைக்கப்பட்டதோ !!

**M. ஆயிஷா பாத்திமா**
10 ஆம் வகுப்பு, தண்டையார்பேட்டை



# ஒரு ஊரில் ஒரு பள்ளி

உலகை வெல்ல ஆயுதம் தேவை இல்லை, கொஞ்சம் புத்தி நிறைய யுக்தி இருந்தால் போதும். அதை நமக்கு கற்றுக் கொடுக்கும் இடமே பள்ளி. என் ஊரில் அமைதியான இடத்தில் எனது பள்ளி அமைந்து இருக்கிறது. எல்லோரும் சமமாக இருக்கின்றோம். மாணவர்கள் பாடதிட்ட மாற்றத்திற்கு ஏற்றவாறு மாறியுள்ளனர்.

ஆனால் புத்தக புழுவாக மட்டும் இருந்துவிடாமல் நவீன தொழில் நுட்பத்தை உள் வாங்கி வாழ்க்கை சிக்கலையும், மனித மனங்களின் முரண்பாடுகளையும் கையாள கற்றுக் கொள்ளும் இடமாகவும் பள்ளி இருக்க வேண்டும் என்பது எனது கனவாகும். அவ்வாறு நான் விரும்பும் எனது கனவுப் பள்ளி ஏனைய பள்ளிகளை விட தனித்துவமாக இருக்கும்.

வகுப்பறைகள் வளர்ந்து வரும் தொழில்நுட்ப வசதிகளை உள் வாங்கியதாகவும், மாணவர்களின் கற்கும் எண்ணத்தை தூண்டும் வகுப்பறை ஆகவும் இருக்க வேண்டும். கணினியை பயன்படுத்தி கற்பிக்கும் ஆசிரியர்கள் எனது கனவு பள்ளியில் இருப்பார்கள்.

மேலும் நாம் ஒழுக்கமுள்ள மாணவர்களை ஈன்றெடுக்கும் எனது கனவுப் பள்ளி குழந்தைகளின் விருப்பங்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகளை போற்றக் கூடியதாக இருக்கும்.

**B. சம்யுக்தா**
9ஆம் வகுப்பு,திருவொற்றியூர்



# துணுக்கு

கல்வி என்னும் சொத்து
அள்ள அள்ள குறையாத முத்து

**S.ஜனனி**
8ஆம் வகுப்பு,எண்ணூர்



# குழந்தைகளின் படைப்புகள்

## ஆலயம்

வெற்றுபானையாய்!!
தன்னையே அறியாது வந்த எம்மை !!
அன்பை காட்டி !!
அறிவை ஊட்டி!!
இருளை விலக்கி !!
உள்ளம் தெளிவித்து !!
மனம் மகிழ்வித்து !!
உலகை அறிய வைத்து !!
உயிர்பித்த ஆலயமே !! எங்கள் பள்ளி !!



எழிலரசன்
6 ஆம் வகுப்பு,திருவொற்றியூர்



## பள்ளி பருவம்

பாதி வளர்ந்து !!
பருவம் அடைந்து!!
காதல் உணர்ந்து!!
பணம் தேடி பின்பு அன்பு நாடி!!
உலகம் புரிந்து !!
உன்னை அறிந்து !!
இதுவரை வாழ்வில் அழகும் இன்பமும் !!
நிறைந்த நாட்கள் எது என்று தேடினால் !!
அது பள்ளி பருவம் மட்டும்தான் !!
பள்ளி நாட்களை மறக்க முடியாது !!



C. மானஸ்ரினி,
8 ஆம் வகுப்பு, இராயபுரம்




## எதிர் பார்ப்பு

பள்ளி பள்ளி முதன் முதலில் உன்னில் சேர்ந்தேன் !!
எதிர்பார்ப்புகளை தந்தாய் !!
தினமும் உன்னுடன் கற்றேன் !!
நான் விரும்பிய உன்னில் தவறு உள்ளது என சிந்திக்க செய்தாய் !!
உனது குறைகளை யாரிடம் சொல்வது !!
எனக்குள் பூட்டி வைத்து சிந்திக்க செய்தாய் !!
நிறைய எதிர்பார்ப்புகளோடு முன்தினம் இருந்தேன்!!
நாள் முடிந்ததும் கனவுகளை தந்தாய்!!
எத்தனையோ செய்தியை நீ அல்ல உன் சூழல் எனக்குதந்தது!!
ஆனால் எனக்கு மட்டுமே புரிந்தஉண்மை !!
என் கனவில் மட்டுமே உன்னை மாற்ற முடியும் என்று !!
இத்தனை செய்த பின்னும் மீண்டும் என் தாய் போல் பார்க்க செய்தாய் !!
எனது முயற்சியின் முடிவில் நான் விரும்பிய உன்னை விட்டு வருவேன் !!
எனது பள்ளியே குறைகள் இருந்தாலும் நீயே என் தாய் !!





**R.** யுவஸ்ரீ
11 ஆம் வகுப்பு, இராயபுரம்



# Schools reimagined through eyes of kids

R.Saivenkatesh
@timesofindia.com

**Chennai:** Earthquake alarms, outdoor libraries, lush green gardens, swimming pools, and kabaddi grounds were among the ideal additions to their schools that the city students envisioned and brought to life through 3D cardboard models and art on Sunday.

Exhibiting creative prowess at the Children's Day event organised by the Confederation of Arunodhaya Children Sangam Convention (CASC), a children-teacher network functioning across Korukkupet, Tiruvottiyur, Ennore, and Royapuram, the students also incorporated into their models solutions to issues in their locality and facilities that their schools lack.

For instance, Yuvarani of Tondiarpet's Muruga Dhanushkodi Govt Higher Secondary School in Tiruvottiyur zone, decked up her 'Pasumai Palli' (green school) model with palmyra trees and outdoor reading halls. "Our zone has a lot of industries. What we lack is greenery. I created a model where all sides of schools are covered by plants," the Class XII girl said.

Nishanth K of Vellayan Chettiyar Higher Secondary School, on the other hand, wanted his school to be more tech-savvy. His model is armed with quake detectors and alarms, compost pits, a tech library, and dining rooms.

Students also showed their strong interest in sports as all the five models had grounds for sports such as kho kho, badminton, and football.

"The theme of this event was 'School I Envision', and it was aimed at enabling children to openly share their dreams for a school that is safe, joyful, creative, and welcoming," said Virgil D Sami, executive director, Arunodhaya Centre for Street and Working Children, the brainchild behind the CASC.

To achieve the plans envisioned in the models, the students wish to take their concerns to authorities. "A total of 2,746 CASC members surveyed four-five students each from 36 schools and chalked out a slew of demands. CASC will urge authorities to address them," said Sri Lakshmi, a trainer at Arunodhaya.

**TAKE NOTE:** Cardboard models of schools as envisioned by students

